பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 08 2024 7 15

சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- நாட்டில் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் எட்டு தேசிய அதிவேக சாலை வழித்தட திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- சாகர் கொள்கை செயல்திட்டத்தின்கீழ் இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளுடன் இந்தியா ஒத்துழைப்பை அதிகரித்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- உள்நாட்டு நீர்வழி சரக்குப் போக்குவரத்து கடந்த 10 ஆண்டுகளில் ஆறு மடங்கு அதிகரித்துள்ளதாக கப்பல்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.
- நாட்டில் தொழில்நுட்பம் சார்ந்த குறைதீர்ப்பு நடைமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- கொழும்பில் நடைபெற்ற இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி டை-யில் முடிந்தது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாட்டில் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் எட்டு தேசிய அதிவேக சாலை வழித்தட திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்தும் அரசின் உறுதிப்பாட்டை இது எடுத்துக்காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இந்த நவடிக்கை வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்,

முன்னதாக, 50 ஆயிரத்து 655 கோடி ரூபாய் செலவில் 936 கிலோமீட்டர் நீளமுள்ள எட்டு முக்கியமான தேசிய அதிவேக சாலை வழித்தட திட்டங்களுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது.

இதில் 88 கிலோமீட்டர் நீளமுள்ள ஆக்ரா – குவாலியர் தேசிய அதிவேக வழித்தடம், காரக்பூர் - மோர்கிராம் தேசிய அதிவேக வழித்தடம் ஆகியவையும் அடங்கும்.

இந்தக் கூட்டத்துக்கப் பின் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இந்தத் திட்டங்கள் சரக்கு போக்குவரத்து திறனை மேம்படுத்துவதுடன், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் என்றார்.

<<<<>>>>

புதுதில்லியில் நேற்று தொடங்கிய மாநில ஆளுநர்கள் மாநாடு இன்று நிறைவடைகிறது.

ஆளுநர்கள் தவிர மத்திய அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களின் அதிகாரிகள் பங்கேற்கும் அமர்வுகளும் இந்த மாநாட்டில் நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் தெரிவிக்கப்படும் துணைக் குழுக்களின் கருத்துகளும், ஆலோசனைகளும் இன்றைய நிறைவு அமர்வின்போது குடியரத்தலைவர், குடியரசு துணைத்தலைவர் மற்றும் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும்.

<<<<>>>>

வேளாண் பொருளாதார நிபுணர்களின் 32-வது சர்வதேச மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

7-ம் தேதி வரை நடைபெறும் இந்த மாநாட்டின் கருப்பொருள் நிலையான வேளாண் மற்றும் உணவு முறைகளை நோக்கிய மாற்றம்’ என்பதாகும்.

பருவநிலை மாற்றம், இயற்கை வளங்கள் குறைவது, அதிகரித்து வரும் உற்பத்தி செலவுகள் போன்ற உலகளாவிய சவால்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது, வேளாண்மையில் தொழில்நுட்பத்தின் பங்கை அதிகரிப்பது போன்றவை குறித்தும் இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

இதில் 75 நாடுகளைச் சேர்ந்த ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

நாட்டில் தொழில்நுட்பம் சார்ந்த குறைதீர்ப்பு நடைமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய மற்றும் மாநில தகவல் ஆணையர்கள் பங்கேற்ற ஆண்டுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசிய அவர், தகவல் அறியும் உரிமை தொடர்பான மேல்முறையீட்டு மனுக்கள் விரைந்து தீர்க்கப்படுவதாக கூறினார்.

மத்திய தகவல் ஆணையம் திறன்களை தொடர்ந்து அதிகரித்து வருவதாக திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

உள்நாட்டு நீர்வழி சரக்குப் போக்குவரத்து கடந்த 10 ஆண்டுகளில் ஆறு மடங்கு அதிகரித்துள்ளதாக கப்பல்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில் 2014ஆம் ஆண்டில் நீர்வழி சரக்குப் போக்குவரத்து 29 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்தது என்றார்.

கடந்த நிதியாண்டில் அது 133 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் 106 புதிய தேசிய நீர்வழித்தடங்கள் மேம்படுத்தப்பட்டதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

சாகர் கொள்கை செயல்திட்டத்தின்கீழ் இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளுடன் இந்தியா ஒத்துழைப்பை அதிகரித்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், இந்தியப் பெருங்கடல் பகுதி பெரிய மாற்றத்திற்கு தயாராகி வருகிறது என்றார்.

அதற்கேற்ப இந்தியாவும் தயாராகி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

அண்டை நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கொள்கையின் அடிப்படையில் கூட்டு அனுகுமுறைகளை இந்தியா மேற்கொள்வதாக அவர் கூறினார்.

இந்தியாவில் தற்போது வளர்ச்சி அதிகரித்துள்ளதாகக் கூறிய அவர், அதேநேரத்தில் உலக அளவில் சவால்கள் அதிகரித்துள்ளதாகக் கூறினார்.

சவால்களை திறம்பட எதிர்கொண்டு வாய்ப்புகளை இந்தியா நம்பிக்கையுடன் பயன்படுத்தி வருவதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் அவசியம் என்று மத்திய சுகாதாரத் துறைச் செயலாளர் திரு அபூர்வ சந்திரா கூறியுள்ளார்.

டெங்கு பாதிப்பு அதிகம் உள்ள, தமிழகம் உள்ளிட்ட ஒன்பது மாநிலங்களில் நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தயார்நிலை குறித்து திரு அபூர்வா சந்திரா தலைமையில் புதுதில்லியில் உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது.

நாட்டில் டெங்குவால் ஏற்படும் இறப்பு விகிதம் 1996-ம் ஆண்டில் 3 புள்ளி 3 சதவீதத்திலிருந்து 2023-ம் ஆண்டில் பூஜ்யம் புள்ளி ஒன்று ஏழு சதவீதமாக குறைந்துள்ளது அவர் கூறினார்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த மாநில அரசுகளும் உள்ளாட்சி அமைப்புகளும் மேலும் அதிக கவனத்துடன் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் மற்றும் தில்லி, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழகம், தெலங்கானா, உத்தரபிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

<<<<>>>>

தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்களில் உள்ள காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில கூட்டுறவு மற்றும் உணவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஜே. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை பணிகள் தொடர்பாக அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளுக்கு கூட்டுறவுத்துறை பாலமாக செயல்படும் என்று கூறினார்.

<<<<>>>>

கால்நடைத்துறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 புள்ளி 5 சதவீத பங்களிப்பை வழங்குவதாக மத்திய கால்நடை பராமரிப்புத்துறை செயலாளர் திருமதி அல்கா உபாத்யாயா தெரிவித்துள்ளார்.

21வது தேசிய கால்நடை கணக்கெடுப்பு அடுத்த மாதம் தொடங்க உள்ள நிலையில் அது தொடர்பான மண்டல பயிலரங்கு சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதில் காணொலி மூலம் பங்கேற்றுப் பேசிய திருமதி அல்கா உபாத்யாயா, இந்தியாவில் 53 புள்ளி 6 கோடி கால்நடைகள் உள்ளதாகத் தெரிவித்தார்.

பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்திலும், முட்டை உற்பத்தியல் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த பயிலரங்கிற்குப் பின் செய்தியாளர்கிளடம் பேசிய தமிழக கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், தமிழகத்தில் சுமார் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக கூறினார்.

<<<<>>>>

வயநாட்டில் நிலச்சரிவால் பாதிக்கபட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

40 தேசிய பேரிடர் மீட்புக் குழுக்கள் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

மீட்கப்பட்ட 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் 17 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்

<<<>>>

இலங்கை கடற்படையின் படகு மோதி உயிரிழந்த தமிழக மீனவரின் உடல் இன்று அதிகாலை இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிறைபிடிக்கப்பட்ட 2 மீனவர்களும் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், மற்றும் கோவாவில் சில இடங்களில் இன்று மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கர், கிழக்கு ராஜஸ்தான், உத்தரகண்ட், கடலோர கர்நாடகா, மேற்கு வங்கம், சிக்கிம், அருணாச்சல பிரதேசம், அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மற்றும் பீகார் ஆகிய பகுதிகளில் சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<>>>

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி டை-யில் முடிந்தது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட்செய்த இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 230 ரன் எடுத்தது.

231 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்திய அணி, 47 புள்ளி 5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 230 ரன் எடுத்தது.

இதனால் போட்டி டை-யில் முடிவடைந்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொழும்புவில் நாளை நடைபெறுகிறது.

<<<<>>>>